# நிலையான பங்கு மாற்று விதிமுறைகள்
# &
# முதலீட்டாளர்கள் கல்வி மற்றும் பாதுகாப்புக்கான நிதிமாற்றுதல் விதிமுறைகள்

## 1. முகவரி மாற்றம்

### 1.1 கோரிக்கைகளைப் பெறுதல்

**முகவரி மாற்றத்துக்கான கோரிக்கைகள் கீழ்க்கண்ட இவர்களிடமிருந்து மட்டுமே ஏற்கப்படும்:**

1. பதிவுபெற்ற ஒரே / முதல் பங்குதாரர் (பத்திரதாரர்) .
2. முதல் நபர் இறந்திருப்பின் பங்கு வைத்திருக்கும் இணை நபர்.

### 1.2 ஆவணமாக்கல்

**பதிவுபெற்ற தனி ஒருவரும் / முதல் நபரும் ஆவணமாக்கல்**

- தனி ஒருவரும் / முதல் நபரின் ( கைவசம் பங்கை வைத்திருப்பவரின்) கையொப்பமிட்ட வேண்டுகோள்.
- முகவரி சான்று ஏதேனும் ஒன்றின் நகல் (ஆதார் அட்டை / வாக்காளர் அட்டை / கடவுச்சீட்டு / உணவுப் பங்கீட்டு அட்டை / ஓட்டுநர் உரிமம்).
- தனி ஒருவரும் / முதல் நபரின் கையொப்பம் மீது வங்கியாளரின் சான்றொப்பம் (எங்களுடைய பதிவேடுகளில் உள்ள மாதிரிகளோடு பொருந்திப்போகாத பட்சத்தில் மட்டும்).

**பதிவுபெற்ற இணை நபரின் ஆவணமாக்கல்**

- இணை நபரின் வேண்டுகோள் கடிதம்.
- முகவரிச் சான்று ஏதேனும் ஒன்றின் நகல் (ஆதார் அட்டை / வாக்காளர் அட்டை / கடவுச்சீட்டு / உணவுப் பங்கீட்டு அட்டை / ஓட்டுனர் உரிமம்).
- இணைப் பங்குதாரர் கையொப்பம் மீது வங்கியாளரின் சான்றொப்பம் (எங்களுடைய பதிவேடுகளில் உள்ள மாதிரிகளோடு பொருந்திப் போகாத பட்சத்தில் மட்டும்)
- முதல் பங்குதாரரின் சான்றளிக்கப்பட்ட இறப்புச் சான்றிதழ் நகல்.

**அமைப்புக் கூட்டாண்மை வகையான பங்கு வைத்திருப்போரின் கார்ப்பரேட் ஆவணமாக்கல்**

- நிறுவனத்தின் தலைப்பு அச்சுமடலில் விடுக்கப்பட்ட வேண்டுகோள் கடிதம் கையொப்பமிடும் அதிகாரம் பெற்றவரின் கையொப்பத்துடன் .
- நிறுவனத்திற்காக வேண்டுகோள் கடிதத்தில் கையொப்பமமிடும் அதிகாரம் பெற்ற கையொப்பதாரருக்கு அதிகாரமளிக்கும் இயக்குநர் குழுமத் தீர்மானத்திற்குச் சான்று அளிக்கப்பட்டதன் நகல்.
- அடையாளம் காணும் அட்டை ஏதேனும் ஒன்றின் நகலுடன் கையொப்பதாரரின் புகைப்படமும் மற்றும் கையொப்பமும் (PAN அட்டை / கடவுச்சீட்டு / ஓட்டுநர் உரிமம்).
- முகவரி மாற்றத்திற்கான வேண்டுகோள் கடிதம் நிரப்பி இந்திய நிறுவன பதிவாளரிடம் பதிவுசெய்யப்பட்ட ஆவணத்திற்கு சான்றளிக்கப்பட்டதன் நகல்.

## 2. நிறுவன பதிவாளர் பதிவேற்றம்/ வங்கி ஆணையின் மாற்றம்

### 2.1 கோரிக்கைகளைப் பெறுதல்

### வங்கி ஆணையினை மாற்றுவதற்கான வேண்டுகோள் கடிதங்கள் பெறுதல் கீழ்கண்டவர்களிடம் பெறப்படும்

1. பதிவு பெற்ற ஒரே / முதல் பங்குதாரர் (பத்திரதாரர்).
2. முதல் நபர் இறந்திருப்பின் பங்கு வைத்திருக்கும் இணைநபர்.

### 2 2 ஆவணமாக்கல்

**பதிவுபெற்ற தனி ஒருவரும் / முதல் நபரும் ஆவணமாக்கல்.**

- வேண்டுகோள் கடிதம் / ECS ஆணை படிவம் தனி ஒருவரும் முதல் நபரும் கையொப்பத்துடன் நிரப்பி அனுப்ப வேண்டும்.
- ரத்து செய்யப்பட்ட காசோலையின் அசல்.
- பங்கு வைத்திருக்கும் தனி ஒருவர் / முதல் நபர் கையொப்பம் பதிவேடுகளிலுள்ள மாதிரி கையொப்பத்தோடு பொருந்தி போகவில்லையெனில் வங்கியாளரின் சான்றொப்பம் இணைக்கப் பெறவேண்டும்.

**பதிவுபெற்ற பங்கு வைத்திருக்கும் இணை நபரின் ஆவணமாக்கல்**

- இணை நபரின் முறையே நிரப்பிய வேண்டுகோள் கடிதம் ECS ஆணை,

- ரத்து செய்யப்பட்ட காசோலையின் அசல்
- இணைப்பங்கு வைத்திருப்பவரின் கையொப்பம் மீது வங்கியாளரின் சான்றொப்பம் (எங்களுடைய பதிவேடுகளில் உள்ள மாதிரிகளோடு பொருந்திப் போகாத பட்சத்தில் மட்டும்).
- முதல் நபரின் இறப்புச் சான்றிதழில் சான்றுறுதி அலுவலர் / அரசு இதழ் பதிவு பெற்ற அலுவலர் சான்றொப்பம்.

**அமைப்புக் கூட்டாண்மை வகையில் பங்குகள் வைத்திருப்பவரின் ஆவணமாக்கல்**

- நிறுவனத்தின் தலைப்பு அச்சுமடலில் எழுதப்பட்ட வேண்டுகோள் கடிதம் அதிகாரம் பெற்ற கையொப்பதாரரின் கையொப்பத்தோடு நுஊளூ ஆணை படிவத்தை முறையே நிரப்புதல்
- நிறுவனத்திற்காக வேண்டுகோள் கடிதத்தில் அதிகாரம் பெற்ற கையொப்பதாரரின் கையொப்பத்திற்கு இயக்குனர் குழுமம் இயற்றிய தீர்மானத்தில் இருந்து இசைவு பெற்றதன் சான்றளிக்கப்பட்ட நகல்.
- அடையாளம் காணும் அட்டை ஏதேனும் ஒன்றின் நகலுடன் கையொப்பதாரரின் புகைப்படமும் மற்றும் கையொப்பமும் (PANஅட்டை / கடவுச்சீட்டு / ஓட்டுநர் உரிமம்).
- ரத்து செய்யப்பட்ட காசோலையின் அசல்

## 3. பங்குகளின் பரிமாற்றம்

### பங்கு வைத்திருக்கும் தனி ஒருவரின் பரிமாற்றம்

### 3.1 கோரிக்கைகளைப் பெறுதல்

- பங்குகள் யாருடையப் பெயருக்கு மாற்றப்பட வேண்டுமோ அவர் சட்ட முறைப்படி வாரிசுதாரராகவோ / உரிமை கோருனராகவோ இருந்தால் மட்டுமே பங்கு மாற்றத்திற்கான வேண்டுகோள் பரிசீலிக்கப்படும்.

### 3.2. ஆவணமாக்கல்

**பங்கு மாற்ற கீழ்கண்ட ஆவணங்கள் தேவை**
**பத்திரங்களின் மொத்த சந்தை மதிப்பு விண்ணப்பித்த நாள் வரை இரண்டு இலட்சத்திற்கும் குறைவாக இருந்தால் மட்டும்.**

- பங்குப் பத்திரங்களின் அசல்.
- பரிமாற்ற வேண்டுகோள் விண்ணப்பம் அனைத்து விவரங்களையும் உள்ளடக்கி சட்டப்படியான எல்லா வாரிசுதாரர் / உரிமை கோருநர்களால் கையொப்பமிட்டு நிரப்பப்பட்டிருக்க வேண்டும்.

- இறப்புச் சான்றிதழின் நகலில் சான்றுறுதி அலுவலர் அல்லது அரசிதழில் பதிவு பெற்ற முதல்நிலை அலுவலர் சான்றொப்பம் பெற்றிருக்க வேண்டும்.
- எவருடையப் பெயருக்கு பங்குகள் மாற்றப்பட வேண்டுமோ அந்த சட்டப்படியான வாரிசுதாரர்/ உரிமை கோருநர் சுய சான்றொப்பத்துடன் கூடிய பான் அட்டை நகல்.
- ரூபாய் 100 மதிப்புள்ள நீதித்துறை சாரா முத்திரைத்தாளில் அமைந்த ஈட்டு உறுதிப்பத்திரத்தில் சட்டமுறைப்படியான எல்லா வாரிசுதாரரும்எல்லா பக்கங்களிலும் கையொப்பமிட்டு சான்றுறுதி அலுவலரின் கையொப்பம் மற்றும் முத்திரையுடன் சான்றொப்பம் பெற்றிருக்க வேண்டும்.
- ரூபாய் 50 மதிப்புள்ள நீதித்துறை சாரா முத்திரைத்தாளில் அமைந்த ஆணை உறுதி ஆவணத்தில் சட்டம் முறைப்படியான எல்லா வாரிசுதாரர்கள் / உரிமை கோருநர்களின் கையொப்பத்துடன் முறையே சான்றுறுதி அலுவலரின் கையொப்பம் மற்றும் முத்திரையுடன் இணைந்த சான்றொப்பம் பெற்றிருக்க வேண்டும்.
- பங்கு மாற்றத்திற்கு எந்தவித மறுப்பும் இல்லை என பங்கு வைத்திருந்த இறந்தவரின் சட்டப்படியான வாரிசு தாரர்கள் நிரப்பிய தடையில்லா சான்றிதழ் அல்லது குடும்ப தீர்வுப் பத்திரத்தில் சட்ட முறையான எல்லா வாரிசுதாரர்கள் / உரிமை கோருனார்கள் முறையே சான்றுறுதி அலுவலரின் கையொப்பம் முத்திரை ஆகியவற்றுடன் சான்றுறுதி பெற்றிருக்க வேண்டும்.
- மரபு வழி உரிமை சான்றிதழ் அல்லது உயிலின் விருப்புறுதி சான்றிதழ்அல்லது உயில் அல்லது ஆளுகையை உரிமை ஆவணம் அல்லது நீதிமன்ற தீர்ப்பு ஆணை இவற்றில் இந்திய வாரிசுரிமைச் சட்டம் 1925க்கு பொருந்திவருவதில் சான்றுறுதி அலுவலரின் கையொப்பம் முத்திரையுடன் கூடிய சான்றொப்பம் இந்த ஆவணத்தை ஒப்படைக்கும் பட்சத்தில் இழப்பீட்டுப் பத்திரம் ஆணை உறுதி ஆவணமோ ஒப்படைக்கத் தேவை இல்லை.

**பங்குகளில் மொத்த சந்தை மதிப்பு ரூபாய் 2 லட்சத்துக்கு மேல் விண்ணப்பித்த நாள் வரை.**

- பங்கு பத்திரங்களின் அசல்
- பரிமாற்ற வேண்டுகோள் விண்ணப்பம் அனைத்து விவரங்களையும் உள்ளடக்கி சட்டப்படியான எல்லா வாரிசுதாரர் உரிமை கோரினர்களால் கையொப்பமிட்டு நிரப்பப்பட்டு இருக்க வேண்டும்.

- இறப்பு சான்றிதழின் நகலில் சான்றுறுதி அலுவலர் அல்லது அரசிதழில் பதிவு பெற்ற முதல்நிலை அலுவலரின் சான்றொப்பம் பெற்றிருக்க வேண்டும்
- எவருடைய பெயருக்கு பங்குகள் மாற்றப்பட வேண்டுமோ அந்த சட்டப்படியான வாரிசுதாரர் / உரிமை கோருனர் சுய சான்றொப்பத்துடன் கூடிய ஞஹஜூ அட்டை நகல்
- ரூ. 50 மதிப்புள்ள நீதித்துறை சாரா முத்திரைத்தாளில் அமைந்த ஆணை உறுதி ஆவணத்தில் சட்டம் முறைப்படியான எல்லா வாரிசுதாரர்களும் / உரிமை கோருனர்களின் கையொப்பத்துடன் முறையே சான்றுறுதி அலுவலரின் கையொப்பம் முத்திரையுடன் இணைந்த சான்றொப்பம் பெற்றிருக்க வேண்டும்.

## 4. இணை நபர் பரிமாற்றம்

## இணை நபரிடம் இருந்து பங்குகளை மாற்றுவது (பங்குதாரரின் பெயரை நீக்குதல்)

### 4.1 கோரிக்கைகளைப் பெறுதல்

- உயிர் வாழ்கிற பங்கு வைத்து இருப்பவரிடம் இருந்து வருகிற மாற்றத்திற்கான கோரிக்கைகள் மட்டுமே ஏற்கப்படும். அவருடைய பெயருக்கு மட்டுமே மாற்றித் தரப்படும்.

### 4.2. ஆவணப்படுத்தல்

**பங்குகளை மாற்றுவதற்கான கோரிக்கை மற்ற உயிர் வாழ்கின்ற பங்குதாரர்களிடம் மட்டுமே ஏற்கப்படும்**

- பங்கு பத்திரங்களின் அசல்
- மாற்றம் கோருகின்ற படிவத்தில் உயிர்வாழ்ந்து வருகிற பங்கு உரிமை வைத்திருப்பவரின் அனைத்து விவரங்களையும் பூர்த்திசெய்து கையொப்பமிட வேண்டும்.
- இறப்புச் சான்றிதழின் நகல் சான்றுறுதி அலுவலர் அல்லது அரசிதழில் பதிவுபெற்ற முதல்நிலை அலுவலரின் சான்றொப்பம் பெற்றிருக்க வேண்டும்.

- எவருடைய பெயருக்கு பங்குகள் மாற்றப்பட வேண்டுமோ அந்தச் சட்டப்படியான வாரிசுதாரர் / உரிமை கோருபவர்களால் சுய சான்றொப்பத்துடன் கூடிய PAN அட்டை நகல்.

- பங்கு வைத்திருப்பவரின் கையொப்பம் மீது வங்கியாளரின் சான்றொப்பம் (எங்களுடைய பதிவேடுகளில் உள்ள மாதிரிகளோடு பொருந்திப் போகாத பட்சத்தில் மட்டும்)

## 5. பங்குகளை பெயர் இடமாற்றம் வழங்குதல்

### 5.1 கோரிக்கைகளைப் பெறுதல்

- பதிவுபெற்ற பங்கு வைத்திருப்பவரின் கோரிக்கைகள் மட்டுமே பங்குகளைப் பெயர் இடம் மாற்றி வழங்குவதற்கு ஏற்றுக்கொள்ளப்படும்.

### 5.2 ஆவணமாக்கல்

**பங்கு வைத்திருப்பவரின் ஆவணமாக்கல்**

- பங்கு வைத்திருக்கும் அனைவரிடமிருந்தும் முறையாக கையொப்பமிடப்பட்ட கடிதங்கள்
- பங்கு பத்திரங்களின் அசல்
- பங்கு வைத்திருப்போரின் ஞூஹசூ அட்டையின் சுய சான்றொப்பம் இட்ட நகல்
- பங்கு வைத்திருப்பவரின் கையெழுத்தின் மீது வங்கியாளரின் சான்றொப்பம் (எங்களது பதிவேடுகளில் உள்ள கையொப்ப மாதிரியோடு பொருந்திப் போகாத பட்சத்தில் மட்டும்).

## 6. பங்குகளை மின்னணு (Demat) செய்தல்

### 6.1 கோரிக்கைக்களைப் பெறுதல்

பங்குகளை மின்னணு (Demat) செய்யும்படியான வேண்டுகோள்களை வரவு வைத்தல் கீழ்க்கண்டவர்க்கு மட்டுமே வழங்கப்படும்.

1. வைப்பு பங்கேற்பாளர்கள்

### 6.2. ஆவணமாக்கல்

#### வைப்பு பங்கேற்பாளர்களின் ஆவணமாக்கல்

- பங்கு பத்திரங்களின் அசல்
- மின்னணு (Demat) வேண்டுகோள் விண்ணப்பத்தில் முறையே நிரப்பி அத்துடன் வைப்பு பங்கேற்பாளர்களின் முத்திரையும் கையொப்பமும் இணைத்தல்
- பங்கு வைத்திருப்போரின் PAN அட்டை நகலில் சுயசான்றொப்பம் இடுதல்
- பங்கு வைத்திருப்பவரின் கையொப்பம் மீது வங்கியாளரின் சான்றொப்பம் (எங்களுடைய பதிவேடுகளில் உள்ள மாதிரிகளோடு பொருந்திப் போகாத பட்சத்தில் மட்டும்)
- பங்கு வைத்து இருப்பவரின் பெயர் மாற்றமோ எழுத்து மாற்றமோ தேவை எனின் ஆணை உறுதி ஆவணம் அல்லது அரசியல் அறிவிப்புப் பங்கு வைத்து இருப்பவரிடம் இருந்து சுய உறுதிமொழி விண்ணப்பம்.
- பங்களித்தோரின் பெயரை மாற்றி வழங்குதல் மற்றும் மின்னணு (Demat) செய்வது எனில் பின்னிணைப்பு O.A விண்ணப்பமும் பங்குகளை மாற்றி வழங்குதல் மற்றும் மின்னணு (Demat) செய்தல் எனில் பின்னிணைப்பு O.B விண்ணப்பமும் வேண்டும்.

#### அமைப்பு கூட்டாண்மை வகையிலான பங்கு வைத்திருப்பவரின் ஆவணமாக்கல்

- பங்கு பத்திரங்களின் அசல்
- மின்னணு (Demat) வேண்டுகோள் விண்ணப்பத்தை முறையாக நிரப்பி அத்துடன் வைப்பு பங்கேற்பாளர்கள் முத்திரையும் கையொப்பமும் பெற்றிருத்தல் வேண்டும்.
- மின்னணு (Demat) வேண்டுகோள் விண்ணப்பத்தில் நிறுவனத்தின் சார்பாக கையொப்பமிடும் அதிகாரப்பூர்வ கையொப்பதாரருக்கு அதிகாரத்தை அளிக்கும் இயக்குனர் குழும தீர்மானத்தின் சன்றளிக்கப்பட்ட நகல்.
- அதிகாரப்பூர்வ கையொப்பதாரரரின் PAN அட்டையின் நகல்.
- நிறுவனத்தின் அமைப்பு முறையேடு மற்றும் செயல்முறை விதிகள் ஆகியவற்றின் நகல்.

## 7. பங்குகளின் மறுவடிவமைப்பு (rematerialisation of shares)

### 7.1. கோரிக்கைக்களைப் பெறுதல்

**மறு வடிவமைப்புப் பங்குகளை மாற்றுவதற்கான கோரிக்கைகளைக் கீழ்காணும் நிலையில் மட்டுமே ஊக்கப்படுத்தப்படும்.**

- பதிவுபெற்ற பங்கு வைத்திருப்போர்
- வைப்பு பங்கேற்பாளர்கள்

### 7.2. ஆவணமாக்கல்

**பதிவுபெற்ற பங்கு வைத்திருப்போர்/வைப்பு பங்கேற்பாளர்கள்**

- மறு வடிமைப்பு வேண்டுகோள் விண்ணப்பத்தை முறையே நிரப்பி அதனுடன் வைப்புத் தொகையில் பங்கேற்பாளர்களின் முத்திரை கையொப்பம் இடுதல்
- வைப்புத் தொகையில் பங்கேற்பாளர்களின் வாடிக்கையாளர் முதன்மைப் பட்டியல் நகலை பங்கு வைத்திருப்பவரில் இருந்து பெறுதல்.

**அமைப்பு கூட்டாண்மை வகையிலான பங்கு வைத்திருப்பவரின் ஆவணமாக்கல்**

- முறையே நிரப்பிய மறு வடிவைப்பாக வேண்டுகோள் விண்ணப்பம்
- வேண்டுகோள் விண்ணப்பத்தின் சான்றிதழில் கையொப்பதாரராக அதிகாரம் பெற்ற குழும தீர்மானத்தின் சான்றிதழ்.
- நிறுவனத்தின் அமைப்பு முறையேடு மற்றும் செயல்முறை விதிகள் ஆகியவற்றின் நகல்.
- வைப்புத் தொகையில் பங்கேற்பாளரின் கையொப்பம் முத்திரை யுடன் முதன்மை வாடிக்கையாளர் பட்டியலுக்கான நகல்

## 8. பகுப்பு / தொகுப்பு / சான்றிதழ் சிதைத்தல்

### 8.1 கோரிக்கைகளைப் பெறுதல்

- பகுப்பு / தொகுப்பு / சான்றிதழ் சிதைத்தல் போன்ற கோரிக்கைகள் பதிவுபெற்ற பங்கு வைத்திருப்போரிந்து மட்டுமே ஏற்கப்படும்

### 8.2 ஆவணமாக்கல்

**பங்கு வைத்திருப்போரின் ஆவணமாக்கல்**

- பங்கு பத்திரங்களின் அசல்
- பங்குதாரர் அனைவரும் கையொப்பமிட்ட வேண்டுகோள் கடிதம்
- பங்கு வைத்திருப்போரின் கையெழுத்தின் மீது வங்கியாளரின் சான்றொப்பம் (ஒருவேளை எங்களுடைய பதிவேடுகளில் உள்ள கையொப்ப மாதிரிகளோடு பொருந்தி போகாத பட்சத்தில் மட்டும்)

## 9. நியமனம் பதிவு / மாற்றம் செய்தல்

### 9.1 கோரிக்கைகளைப் பெறுதல்

- பதிவு செய்வதற்கானதும் / நியமனம் மாற்றுவதற்கானதுமாகிய கோரிக்கைகளை பதிவுபெற்ற பங்குதாரரிடமிருந்து மட்டுமே ஏற்கப்படும்.

### 9.2. ஆவணமாக்கல்

**பதிவுபெற்ற பங்குதாரரின் ஆவணமாக்கல்**

- முதல் / தனி ஒருவர் பங்குதார் விடுக்கும் வேண்டுகோள் கடிதம்
- நியமன விண்ணப்பம் SH13 முறையாக கையொப்பத்துடன் பங்குதாரரால் நிரப்பப்பட்டிருக்க வேண்டும்
- பங்குதாரரின் கையொப்பத்தின் மீது வங்கியாளரின் சான்றொப்பம் (ஒருவேளை எங்களுடைய பதிவேடுகளில் உள்ள கையொப்ப மாதிரிகாளோடு பொருத்திப் போகாத பட்சத்தில் மட்டும்)
- அடையாளச் சான்று ஏதேனும் ஒன்றின் நகல் (ஆதார் அட்டை//வாக்காளர் அட்டை/ கடவுச்சீட்டு/ பங்கீட்டு அட்டை /ஓட்டுனர் உரிமம்)

## 10. பதிவு அல்லது மாற்றம் செய்தல் / அங்கீகாரம் பெற்ற நபர்

### 10.1 கோரிக்கைகளைப் பெறுதல்

அங்கீகாரம் பெற்ற நபர் பதவி அல்லது மாற்றம் வேண்டுகோள் கீழ்கண்டவரிடமிருந்து மட்டுமே ஏற்கப்படும்.

- பதிவுபெற்ற தனியொருவர் / முதல் நபராகிய பங்கு வைத்திருப்போர் (கடனீட்டு பத்திரம் வைத்திருப்போர்).

- முதல் நபர் மரணம் அடைந்திருப்பின் கைவசம் வைத்திருக்கும் இணை நபர்

## 10.2 ஆவணமாக்கல்

**பதிவு செய்த பங்குதாரர்களின் ஆவணமாக்கல்**

- அனைத்து பங்குதாரர்களிடம் இருந்தும் வேண்டுகோள் கடிதம்
- அங்கீகாரம் பெற்ற நபரின் கையொப்பமும் அதற்கான ஆணை உறுதி ஆவணமும் சான்றுறுதி அலுவலரின் முத்திரை கையொப்பத்துடன் கூடிய சான்றொப்பமும் பெற வேண்டும்.

**அமைப்பு கூட்டாண்மை வகையான பங்கு வைத்திருப்போரின் ஆவணமாக்கல்**

- நிறுவனத்தின் தலைப்பு அச்சுமடலில் உரிய கையொப்பமிடும் அதிகாரம் பெற்றவரின் கையொப்பத்துடன் கூடிய வேண்டுகோள் கடிதம்
- இயக்குநர் குழும தீர்மானத்தின் அதிகாரத்தின் மூலம் கையொப்பதாரராக அதிகாரம் பெற்றவரின் கையொப்பத்தை நிறுவனத்திற்காக வேண்டுகோள் விண்ணப்பத்தின் சான்றிதழ் நகல்.
- அடையாளம் காணும் அட்டை ஏதேனும் ஒன்றின் நகலுடன் கையொப்பதாரரின் புகைப்படமும் மற்றும் கையொப்பமும் (PAN அட்டை / கடவுச்சீட்டு / ஓட்டுநர் உரிமம்)
- அங்கீகாரம் பெற்ற நபரின் கையொப்பமும் அதற்கான ஆணை உறுதி ஆவணமும் சான்றுறுதி அலுவலரின் முத்திரை கையொப்பத்துடன் கூடிய சான்றொப்பமும் பெற வேண்டும்.

## 11. பெயர்மாற்றம்

### 11.1 வேண்டுகோளை வரவு வைத்தல் பெயர்மாற்றம் தொடர்பான வேண்டுகோளைப் பெறுவது கீழ்க்கண்டோரிடமிருந்து மட்டுமே ஏற்கப்படும்.

1. பதிவுபெற்ற தனி /முதல் பங்குதாரர்

2. முதல் பங்குதாரர் இறந்திருப்பின் இணை நபரான பங்குதாரர்

## 11.2 ஆவணமாக்கல்

**பங்குதாரரால் ஆவணமாக்கல்.**

- பங்குப் பத்திரத்திலுள்ள பெயரைத் திருத்த வேண்டியதைக் குறிப்பிட்டுக் கையொப்பத்துடன் வேண்டுகோள் கடிதம்.
- பங்கு பத்திரத்தின் அசல்.
- பதிவு பெற்ற பங்குதாரரின் PAN அட்டை மற்றும் ஆதார் அட்டை மீது சுய சான்றொப்பமிட்டதன் நகல்.
- அரசிதழில் அறிவிக்கப்பட்ட பெயர் மாற்றத்தின் நகலுடன் சான்றுறுதி அலுவலர் முத்திரை கையொப்பத்துடனான சான்றொப்பம்.

(அல்லது)

ரூ 50 மதிப்புள்ள நிதித்துறை அல்லாத முத்திரைத்தாளில் ஆணை உறுதி

ஆவணமும் அத்துடன் சான்றுறுதி அலுவலரின் முத்திரை

கையொப்பத்தோடு சான்றொப்பம்.

(அல்லது)

- பெயர் மாற்றத்திற்கு தொடர்பான திருமணச் சான்றிதழ், சான்றுறுதி அலுவலரின் கையொப்பம் முத்திரையோடான சான்றொப்பம்.
- முறையாக சான்றுறுதி அளிக்கப்பட்ட பிறப்புச் சான்றிதழின் நகல்/ பள்ளிச் சான்றிதழ், பெயர் திருத்தத்திற்கான வேண்டுகோள் எனில் சிறுவர் முதல் வயது வந்தோர் மற்றும்) (minor to major)
- ரத்து செய்யப்பட்ட காசோலை, வங்கிக் கணக்குப் புத்தகத்தின் நகல்
- பங்கு வைத்திருப்பவரின் கையொப்பம் மீது வங்கியாளரின் சான்றொப்பம் (எங்கள் பதிவேடுகளில் உள்ள மாதிரிகளுடன் பொருந்திப் போகாத பட்சத்தில் மட்டும்)

**அமைப்புக் கூட்டாண்மை வகையான பங்குதாரரின் ஆவணமாக்கல்**

- பெயர் மாற்றத்துக்கான அதிகாரப்பூர்வமான கையொப்பதாரரின் கையொப்பமிட்ட வேண்டுகோள் கடிதம்.
- பங்குப் பத்திரங்களின் அசல்
- இயக்குநர் குழுமம் இயற்றிய தீர்மானத்தின் மூலம் அதிகாரம் பெற்ற கையொப்பதாரரின் கையெழுத்தை கம்பெனி சார்பில் உறுதிசெய்யும் இயக்குநர் தீர்மானம்

- அதிகாரப்பூர்வ கையொப்பதாரரின் PAN அட்டையின் நகல்
- நிறுவனத்தின் அமைப்பு முறையேடு மற்றும் செயல்முறை விதிகளின் நகல்.

## 12. நகல் பங்குச் சான்றிதழ் வழங்குதல்

## கோரிக்கைகளைப் பெறுதல்

### 12.1 வேண்டுகோளை வரவு வைத்தல் பங்கு நகல் சான்றிதழ்களை வழங்குவதற்கான வேண்டுகோளை எற்பது கீழ்க்கண்டவர்க்கு மட்டுமே அனுமதிக்கப்படும்

1. பதியப்பெற்ற பங்குதாரர்
2. மரணமுற்ற பங்குதாரரின் சட்டபூர்வமான வாரிசு தாரர், இணைப்பங்குதாரருக்கு மாற்றித்தரக் கோரும் விண்ணப்பத்துடன்

### 12.2 ஆவணமாக்கல்

**பதிவு பெற்ற பங்குதாரரின் ஆவணமாக்கல்**

- பங்குதாரர்கள் அனைவரின் கையொப்பத்துடனான வேண்டுகோள் கடிதம்.
- ரூ100 மதிப்புள்ள நீதித்துறை சாராத முத்திரைத்தாளில் அமைந்த ஈட்டுறுதிப்பத்திரம் அதில் அனைத்துப் பங்குதாரர்களும் அனைத்துப் பக்கங்களிலும் கையொப்பமிட்டிருத்தல் அத்துடன் சான்றுறுதி அலுவலர் கையொப்பம் முத்திரையுடன் சான்றொப்பம் பெற்றிருத்தல்
- ரூ 50 மதிப்புள்ள, நீதித்துறை சாரா முத்திரைத்தாளில் அமைந்த ஆணை உறுதி ஆவணத்தில், அனைத்து பங்குதாரர்களும் அனைத்துப் பக்கங்களிலும் கையொப்பமிட்டு, அத்துடன் சான்றுறுதி அலுவலரின் கையொப்பம் முத்திரையுடன் சான்றொப்பம்.
- ரூ 10,000 மேலான பங்குகளின் விவரங்களைக் கம்பெனியின் பதிவு அலுவலகத்தின் இட்த்தில் உள்ள அதிக புழக்கத்தில் உள்ள நாளேடுகளில் விளம்பரம் செய்த அத்தாட்சி.
- தொலைந்துபோன பங்குதாரரின் மடலின் எண், சான்றிதழ் எண் மற்றும் குறிப்பிட்த்தக்க விவரங்கள் பங்குகளின் எண்ணிக்கை சான்றிதழின் இழப்பு அதற்கான முதல் தகவல் அறிக்கையின் சான்றொப்பம் பெற்ற நகல் (அல்லது) அசல் அல்லது உள்ளூர் காவல்

நிலையத்தில் அளிக்கப்பட்ட புகாரின் முத்திரையுடன் கையொப்பமிட்ட நகல்.

- பங்குதாரரின் சுய- சான்றொப்பமிட்ட PAN அட்டையின் நகல்
- பங்குதாரரின் சுய சான்றொப்பமிட்ட ஆதார் அட்டையின் நகல், அதுவே அடையாளச் சான்று ஆகும்.
- பதிவு பெற்ற பங்கு வைத்திருப்பவரின் கையொப்பம் பங்கு வைத்திருப்பவரின் கையொப்பம் மீது வங்கியாளரின் சான்றொப்பம் (எங்களது பதிவேடுகளில் உள்ள மாதிரியோடு பொருந்திப் போகாத பட்சத்தில் மட்டும்)

## 13. முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்புக்கான நிதி மாற்றுதல் (IEPF)

- பெருநிறுவன விவகார அமைச்சகம் (MCA) தன் 05.09.2016 இல் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்ட சட்டங்களின் பெயர்கள், முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதிய ஆணைக்குழு (கணக்குப்பதிவு, தணிக்கை, மாற்றல், திருப்பியளித்தல்) சட்ட விதிகள் 07.09.2016 முதல் நடைமுறைக்கு வந்தது.
- மேலும் பெருநிறுவன விவகார அமைச்சகம் (MCA) வெளியிட்ட அறிக்கை மற்றும் சுற்றறிக்கைகளில் IEPF ஆணைக்குழுவுக்கு மாற்றல் அளிப்பது தொடர்பான செயல்படுத்தும் முறைகளைக் குறித்துள்ளது.
- மேற்சொன்ன அறிக்கைகள் விதிமுறைகள் அடிப்படையில், கீழ்க்காணும் நடைமுறைகள் கடைபிடிக்கப்படும்.

## 14. IEPF – லிருந்து தொகையைத் திரும்பப் பெறுவதன் பெறுவதற்கான நடைமுறைகள்

தொகையைத் திரும்பப் பெறுவதற்கான IEPF -5 விண்ணப்பத்தைத் (http:/www.iepf.gov.in) என்ற வலைத்தளத்தில் தரவிறக்கம் செய்ய வேண்டும். அதில் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கவனமாகப் படிக்கவும். மின் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ள குறிப்புத்திரட்டைக் கவனமாக படித்தபின் விண்ணப்பத்தை நிரப்பவும்.

- விண்ணப்பத்தை நிரப்பிய பின் உங்களது கணினியில் சேமித்து வைத்த பிறகு வலைதளத்தில் பதிவேற்ற இணைப்பில் குறிக்கப்பட்டுள்ளபடி ஒப்படைக்கவும். வெற்றிகரமாக பதிவேற்றம் செய்யப்பட்டதற்கு அடையாளமாக SRN குறிப்பீடும் ஒப்புக்கொள்ளல் ஒன்று உருவாகும். அருள்கூர்ந்து அந்த SRN- ஐ, எதிர்காலத்தில் விண்ணப்பத்தின் கண்காணிப்புக்காக குறித்து வைத்துக்கொள்ளவும்.

- முறையாக நிரப்பப்பட்ட IEPF–5 விண்ணப்பத்தையும், அது வெற்றிகரமாக பதிவேற்றப்பட்டதை ஒப்புக்கொண்டதனையும் ஒரு நகல் எடுத்து வைத்துக்கொள்ளவும்.
- ஈட்டுறுதி ஆவணத்தின் அசலை ஒப்படைக்கவும் அதற்கான ஒப்புகை மின் விண்ணப்பத்தின் சுயசான்றொப்பம், இசைவளிக்கும் அலுவலரை (ஐநுஞகு)அவரது பதிவு அலுவலகத்தில், அந்த விண்ணப்பத்தில் குறித்திருக்கும் விவரங்களோடு உரையின் மேல், 'IEPF தொகையைத் திரும்பப் பெறுவதற்கான கோரிக்கை' என குறிப்பிடவும்.
- கொடுக்கப்பட்ட கோரிக்கை விண்ணப்பங்கள் எல்லா நிலைகளிலும், நிறுவன சரிபார்த்தல் அறிக்கையின்படி நிறுவனத்தால் சரிபார்க்கப்பட்டு, ஐநுஞகு ஆணைக் குழுவிலிருந்து 'ஆதாருடன்' இணைக்கப்பட்ட உங்கள் வங்கிக் கணக்கிற்கு மின் பரிமாற்றம் மூலமாக தொகை திரும்ப அளிக்கப்படும்.

## 15. ஆதாயப்பங்கு கோருவதற்கான நடைமுறை

- கொடுக்கப்படாத ஆதாயப்பங்குத் தொகையைக் கோருகிற பங்குதாரரின் கையொப்பமிட்ட வேண்டுகோள் கடிதம்.
- கொடுக்கப்படா ஆதாயப்பங்குத் தொகையை வங்கிக் கணக்கில் சேர்க்க ரத்து செய்யப்பட்ட காசோலையின் அசல்.
- பங்குதாரர் ஒருவேளை தன்பங்குகளைக் காகித வடிவத்தில் வைத்திருந்தால், வங்கிக் கணக்கு விவரங்கள் புதுப்பிக்கப்பட்டு எல்லா ஆதாயப் பங்குத் தொகையும் கணக்கில் செலுத்தப்படும்.
- ஒருவேளை பங்குதாரர் தன் பங்குகளை மின்னணு (Demat) வடிவத்தில் வைத்திருப்பாரானால் வங்கித் தகவல்களைத் தெரிவித்து, நிறுவனம் ஆதாயப் பங்குத் தொகையைச் செலுத்த உதவிட வேண்டும்.
- பதிவு பெற்ற பங்கு வைத்திருப்பவரின் கையொப்பத்தின் மீது வங்கியாளரின் சான்றொப்பம் (எங்களது பதிவேடுகளில் உள்ள மாதிரியோடு பொருந்திப்போகாத பட்சத்தில் மட்டும்) பெறவேண்டும்.